# பொதுடமை கட்சியின் அறிக்கை

நடராஜா ஜனகன்

**முதலாளிகளும், பாட்டாளிகளும**

தொழிலாளர் சர்வதேச நிறுவனமாகிய பொதுவுடமை கழகம் 1847ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் லண்டனில் நடைபெற்ற காங்கிரசில், கார்ல்மார்க்சையும், ஏங்கெல்லையும் கட்சியின் தத்துவார்த்த நடைமுறை வேலைத்திட்டத்தை, வெளியீட்டுக்காக வகுத்திடும் படி பணித்திருந்தது. இவ்வாறு பிறப்பெடுத்ததே இவ் அறிக்கையாகும்.

**பொதுவுடமைக் கட்சியின் அறிக்கை பற்றி ~ லெனின்**

~

சமுதாய வாழ்க்கையெனும் அரங்கினையும் தன்னுள் கொண்டு முரணற்றதாய் அமைந்த பொருள்முதவாதம் வளர்ச்சி பற்றிய மிக விரிவான மிக ஆழமான போதனையாகிய இயக்கவியல் வர்க்க போராட்டத்தையும் ஒரு புதிய கம்யூனிச சமுதாயத்தின் படைப்பாளனாகிய பாட்டாளி வர்க்கத்துக்குள்ள உலகவரலாற்று முக்கியத்துவமுடைய புரட்சிகர பாத்திரத்தையும் பற்றிய தத்துவம். இவை யாவும் அடங்கிய ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்தை இந்தநூல் மாமேதைக்குரிய தெளிவோடும் ஒளிச்சுடரோடும் எடுத்துரைக்கிறது.

இதுவரை உள்ள சமுதாயங்களின் வரலாறு முழுவதும் வர்க்கம் போராட்டங்களின் வரலாறு என்றே இவர்கள் வரையறுக்கின்றனர். இந்த போராட்டங்கள் சிலநேரம் மறைவாகவும் சில நேரம் பகிரங்கமாகவும் இடையறாது நடந்தே வந்துள்ளது. இந்த போராட்டம் சமுதாயம் முழுவதும் புரட்சிகரப் புத்தமைப்பிலோ, அல்லது போராடும் வர்க்கங்களின் பொது அழிவிலோ எப்போதும் முடிவுறலாயிற்று. இன்றைய முதலாளித்துவ யுகத்திற்கு முன்பு இருந்த சமுதாயமுறைமையில் சமூகம் பல்வேறு படிநிலைகளில் இருந்துள்ளது. ஆனால் முதலாளித்துவத்தில் இரண்டு வர்க்கங்களையுடையதாய் சமுதாயம் சுருக்கப்பட்டுள்ளது.

மத்திய கால பண்ணை அடிமைகளிடமிருந்து ஆதி நகரங்களின் சுதந்திரநகரத்தார் உதித்தனர். இந்த நகரத்தாரிடம் இருந்து முதலாளித்துவம் உருவாகியது. வரலாற்றில் அமெரிக்க கண்டம் கண்டுபிடிக்கப்பட்டதும், நன்நம்பிக்கை முனையை சுற்றி செல்லும் கடல்வழிபாதை கண்டுபிடிக்கபட்டதும், ஆரம்பநிலையில் இருந்த முதலாளித்துவம் பெரிய வளர்ச்சியடைய வாய்ப்புகள் ஏற்பட்டன.

பிரபுந்துவ முறையில் அமைந்த உற்பத்திமுறை பெரிய சந்தைகளிற்கு ஏற்றவாறு உற்பத்தியை மேற்கொள்ள முடியாமல் போனதால் அந்த இடத்திற்கு பட்டறை தொழில் முறை உருவானது இக்காலப்பகுதியில் நீராவியும், இயந்திரங்களும் பண்டங்களின் உற்பத்தியில் புரட்சியை உண்டாக்கவே, பட்டறை தொழிலும் நின்று பிடிக்கமுடியாமல் போக நவீன தொழில் துறை வளர்ச்சி பெற்றது சுருக்கமாக சொல்வதென்றால் ரயில் பாதைகள் எப்படி நீண்டு சென்றதோ அதேபோல் முதலாளித்துவமும் வளர்ச்சி பெற்றது.

முதலாளித்துவ வர்க்கத்தின் காலகட்டத்தில் சமுதாயம் புரட்சிகர மாறுதலுக்கு உள்ளனது. முன்பு இருந்த பிரதிநிதித்துவ உறவுகள், தந்தை வழி உறவுகள் கிராமிய பாரம்பரிய உறவுகள் யாவும் இல்லாது போக, பண உறவை தவிர வேறு ஒரு உறவும் இல்லை என்ற நிலைக்கு சமுதாயத்தை உருவாக்கியது.

முதலாளித்துவ சமுதாய முறைமைக்கும் முன்பு இருந்த சமுதாய முறைமைக்கும் இடையே நேர் எதிர்மாறான நிலைமை காணப்படுகிறது. முதலாளித்துவ வர்க்கத்தால் ஓயாது ஒழியாது உற்பத்திக் கருவிகளிலும் இதன் மூலம் உற்பத்தி உறவுகளிலும் இவற்றுடன் கூடவே சமூக உறவுகளிலும் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தாமல் வாழ முடியாது.

ஆனால் இதற்கு முந்திய சமுதாய முறைமையில் மாற்றம் இல்லாமல் அப்படியே வைத்திருப்பதன் மூலமே வாழ்வதற்கு உரிய முதலாவது நிபந்தனையாய் இருந்தது. முதலாளித்துவ உற்பத்தி முறை தொடர்ந்து அபிவிருத்தி அடைந்து செல்வதால் அதற்கு புதிய சந்தைகள் அவசியமாகிறது எனவே உலகம் முழுவதும் சந்தையை தேடி அலைவதும், குடியேறுவதும் அதன் போக்காக இருக்கின்றது. மேலும் உற்பத்தியும் நுகர்வும் அனைத்துலக தன்மை பெறச்செய்கிறது முன்பு உள்நாட்டுமூலப் பொருட்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டவை தற்போது வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட மூலப்பொருட்களால் உற்பத்தி செய்யப்பட்டு, அப்பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நிலை உருவாகிறது. பொருள் உற்பத்தி சர்வதேச மயப்படுவதுபோல அறிவுத்துறையும் சர்வதேச மயப்படுகிறது. நாடுகள், மண்டலங்கள் என உருவாகி எல்லா நாட்டுக்கும் பொதுவான அனைத்துலக இலக்கியம் உருவாகிறது. முதலாளித்துவ முறையில் கிராமிய மக்கள் தொகை குறைவடைந்து, நகரங்களில் மக்கள் அதிகமாக வாழும் நிலமைகள் உருவாகின்றன. முதலாளித்துவ முறைமையின்கீழ் மக்கள் ஒரு பகுதியில் அதிகமாக வாழும் நிலமையும் சொத்துக்கள் ஒரு சிலரின் கைகளில் குவிவதும், இதேபோல் அரசியல் அதிகாரமும், மையப்படுத்தப்படுகிறது. மேலும் பிரிவுகளாக வாழ்ந்த மக்கள் ஒரு அரசின்கீழ் ஒரு வட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றனர் முன்னைய சமுதாயங்களில் சாதித்திராத பல சாதனைகளை முதலாளித்துவம் செய்கிறது. இவற்றை பெரிய பொருள் உற்பத்தி சாதனங்களையும், பரிவர்த்தன


Manifest
der
Kommunistischen Partei.

Veröffentlicht im Februar 1848.

Proletarier aller Länder vereinigt euch.

London.
Gedruckt in der Office der „Bildungs-Gesellschaft für Arbeiter“
von J. E. Burghard
46, Liverpool Street, Bishopsgate

சாதனங்களையும், தோற்றுவித்து இருக்கும் முதலாளித்துவ சமுதாயம் மந்திரவாதி ஒருவன் தான் உருவாக்கிய சக்திகளை அடக்க முடியாமல் திண்டாடுவதைப்போல் முதலாளித்துவம் திண்டாடும் நிலை ஏற்படுகிறது.

எனவே முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டங்கள் இதற்கு உதாரணமாகும். மேலும் மிகப் பெரியளவிலான உற்பத்தியே முதலாளித்துவத்துக்குரிய பிரச்சனையாக உருவாகிறது இதனால் பெரும் பிரச்சனை உருவாகி சமுதாயம் பின்னோக்கி போகின்றதா என்னும் அளவுக்கு இங்கே நிலைமை எழுகிறது. நாகரிகம் மிஞ்சிவிட்டது, வாழ்க்கைக்கு தேவையான பொருட்கள் அளவை மீறிவிட்டன தொழிலும் வாணிகமும் எல்லை கடந்துவிட்டன சமுதாயத்தின் வசமுள்ள உற்பத்தி சக்திகள் முதலாளித்துவ சொத்துடமை உறவுகளின் வளர்ச்சிக்கு இனி உதவுவதாய் இல்லை. அவை இந்த உறவுகளுக்கு பொருந்தாதபடி வலிமையாகிவிட்டன பொருள் உற்பத்தி சக்திகள் இந்த நிலையை கடக்கமுற்பட்டதும் முதலாளித்துவ சமுதாயம் முழுவதும் குழப்பம் உண்டாடுகிறது. முதலாளித்துவம் நிலைபெறுவதற்கு அபாயம் உண்டாடுகிறது இதை எப்படி முதலாளித்துவம் சமாளிக்கின்றது. என்றால்!

1. உற்பத்தி சக்திகளின் பெரும்பகுதியை அழிப்பதன் மூலம்

2. புதிய சந்தைகளை வென்று எடுப்பதன் மூலம்.

3. பழைய சந்தைகளை அழுத்திப் பிழிவதன் மூலம்.

4. நாசகரமான நெருக்கடிகளுக்கு வழி கோருவதன் மூலம்.

5. நெருக்கடிகளை தடுப்பதற்கான வழிவகைகள் குறைப்பதன் மூலம்.

முதலாளித்துவத்தின் மூலதனம் எவ்வளவு வருகின்றதோ அந்தளவிற்கு பாட்டாளி வர்க்கமாகிய நவீன தொழிலாளியும் வளர்கின்றான். முதலாளித்துவ வளர்ச்சியுடன் தொழிலாளியும் வாழத்தக்க நிலைமை உருவாகிறது. எனவே முதலாளித்துவம் நெருக்கடியை சந்திக்கும் போது அது தொழிலாளிக்கும் பாதிப்பை கொடுக்கிறது.

மேலும் நவீன மயப்படுத்தப்பட்ட தொழில்துறை வளர்ச்சி தொழிலாளி வர்க்கத்தின் முக்கியத்தவத்தை குறைத்துக்கொண்டே போகும். இதனால் தொழிலாளியின் முக்கியத்துவம் குறைகிறது. அவனது வருமானம் அவனது உயிரை காப்பாற்ற மட்டுமே போதுமானதாகிறது.

மேலும் தொழிலாளியின் இடத்துக்கு பெண் தொழிலாளி வரும் நிலைமை உருவாக்கப்படுகிறது தொழிலாளியின் முக்கியத்துவம் குறைய உழைக்கும் கருவியாக மாறுகிறான். இதன் பின்னர் இவர்கள் அரசியல் கட்சி என்ற வளர்ச்சி நிலைக்கு செல்கிறார்கள் தொழிலாளர்களின் போட்டி நிலமைகளால் இவை உருவாவதும், பின்னர் குலைவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால் வலிமையானதாக மீண்டும் உருவாகும். ஏதுநிலை காணப்படுகிறது. முதலாளித்துவ முரண்பாடுகள் தொழிலாளர்களுக்கு தமக்கு சாதகமானவற்றை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறது. இங்கிலாந்தில் 10 மணி நேர மகோதார இத்தகைய நிலமைகளால் தொழிலாளிக்கு கிடைத்தது ஆகும்.

முதலாளித்துவம் தனது தேவைக்காக தொழிலாளியை ஸ்தாபனமயப்படுத்தி, அரசியல் அறிவை வழங்கி, ஏன் ஆயுதங்களை கூட வழங்குகிறது. மேலும் முதலாளியினால் சுரண்டப்பட்ட தொழிலாளி, பின்னர் அவனது வருமானத்தை கடைக்காரர், வீட்டுச்சொந்தக்காரர் சுரண்டும் நிலை ஏற்படுகிறது. மேலும் முதலாளித்துவ முறைமையில் மத்திய தரவர்க்கப்பிரிவினர் காலவோட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்குள் வந்து சேர்கின்றார்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையில் இவர்களால் நின்று பிடிக்கமுடியாமல் போவதால் இது தோன்றுகிறது.

முதலாளிக்கு தொழிலாளிக்கு முரண்பாடு எப்போதுமே உண்டு ஆரம்பத்தில் தனிப்பட்ட ரீதியில்தோன்றி, பின்னர், ஒரு தொழிற்சாலை என்று மாறி பின்னர் பல தொழிற்சாலைகளை சேர்ந்தவர்களின் பிரச்சினையாக உருவெடுக்கிறது. இந்த மோதலில் தொழிலாளர்கள் உற்பத்தி உறவுகளை தாக்குவதில்லை. உற்பத்தி கருவிகளையே தாக்குகிறார்கள் இத்தகைய சூழ்நிலைகளில் தொழிற்சங்கங்கள் தோற்றம் பெறுகிறது.

முதலாளித்துவ சூழ்நிலையில் அதன் பிரிவில் இருந்தே பாட்டாளி வர்க்கத்துக்குள் சில பிரிவுகள் தள்ளப்படுகின்றார்கள் இவர்கள் தொழிலாளி வர்க்கத்துக்கு அறிவை கொடுக்கிறார்கள்.

உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்கம் மட்டுமே நிலைத்து நிற்கிறது ஏனைய வர்க்கங்கள் இல்லாமல் போகின்றன.

முந்திய வரலாறு எல்லாம் சிறுபான்மை இயக்க வரலாறு ஆகும். இவர்கள் சிறுபான்மையினரின் நலனுக்காக செயற்பட்டவர்கள் பாட்டாளி வர்க்கம் மட்டுமே பெரும்பான்மையானவரின் நலனுக்காக செயற்படுகின்றவர்கள். முதலாளித்துவ முறையை ஏன் கூடாது என்பதற்கு, முன்னைய சமுதாய முறைமையில் சமுதாய பிரிவு தன்னை உயர்த்திக்கொள்ள அங்கே நெகிழ்வு இருந்தது. ஆனால் முதலாளித்துவத்தில் அது இல்லை.

பண்ணை அடிமை சமுதாயத்தில் ஒரு பிரிவு தம்மை நகரத்தாராக உயர்த்தமுடிந்தது. பிரபுந்துவ சமுதாயத்தில் குட்டி முதலாளிகள் தோற்றம் பெறும் நிலை இருந்தது. ஆனால் நவீன காலத்தில் தொழிலாளி தன் நிலையில் இருந்து கீழ் செல்லும் நிலையே காணப்படுகிறது. எனவே முதலாளித்துவம் இருக்கத் தகுதியற்றதாகிறது.

மூலதனம் உருவாதலும், பெருக்கச்செய்தலும், முதலாளித்துவம் ஆதிக்கம் பெறுவதற்கு அடிப்படையானதாகும். கூலி உழைப்பு இங்கே அவசியம் முதலாளித்துவ தொழில் முன்னேற்றம் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துகிறது. எனவேதான் தனக்கு சவக்குழி தோண்டும் பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவம் உற்பத்தி செய்கிறது. முதலாளித்துவத்தின் வீழ்ச்சியுறல், பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியும் தவிர்க்கமுடியாதவை.(தொடரும்)